**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 246/2022 |
| Prosecution Witness | : | அ.சா.2 |
| Name | : | குமார் |
| Father's/Husband Name: | : | சீனிவாசன் |
| Address : | : | திருமயம் வனச்சகரகம், புதுக்கோட்டை மாவட்டம் |
| Age | : | 55 /2024 |

<u>தேதி: 25/03/2024</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது</u> (1 **முதல் 3 எதிரிகள் ஆஜர்** )

நான் தற்போது திருமயம் வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு வேப்பந்தட்டை வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணியாற்றினேன். கடந்த 16/06/2019 அன்று நள்ளிரவு 12.00 மணியளவில் எங்களது வனச்சரக அலுவலருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வனச்சரகர் எல், குமார் என்பவரது தலைமையில் நானும், வனக்காப்பாளர்கள் பாலசுப்பிரமணியம் மற்றும் குணசேகரன் ஆகியோரும் எங்களது இருசக்கர வாகனத்தில் டார்ச் லைட்டை எடுத்துக்கொண்டு வேட்டையாடும் பகுதிக்கு செல்ல இருந்த நிலையில் சீருடை காவலர்களான ஆய்வாளர் கலா மற்றும் உதவி ஆய்வாளர் சிலம்பரசன் மற்றும் முதல்நிலைக் காவலர் கலைச்செல்வன்

ஆகியோர்களையும்  எங்களது பணிக்கு அழைத்துச் சென்றோம். அவர்கள் அவர்களின் ஜுப்பில் வந்தார்கள். அரும்பாவூரில் பெரிய ஏரியின் தென்கரைப் பகுதிக்கு ஜுப் செல்லும் வரை நாங்கள் சென்றோம். பின்பு நாங்கள் ஒத்தையடி பாதையில் நடந்து சென்றோம். அப்போது அங்கு கோண்டா சைன் என்ற TN-46S2640  என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் தான் வேட்டை நடைபெறும் என நாங்கள் அங்கேயே பதுங்கி கண்காணித்தோம். சிறிது நேரத்தில் வனக்காப்பாளர் பாலசுப்பிரமணியனை கரைப் பகுதியில் நின்று கண்காணித்து சைகை செய்யும்படி வனச்சரகர் உத்தரவிட்டார். அதன்படி அவரும் ் அங்கே சென்று பார்த்தபோது நிலவு ஒளியில் மூன்று நபர்கள் நிற்பது தெரியவருகிறது என எங்களிடம் சைகையாக காண்பித்தார். மேலும் மானொன்று தண்ணீர் குடித்துவிட்டு தரையில் படித்து கிடப்பதாகவும் சைகை மூலம் காண்பித்தார். திடீரென வேட்டு சத்தம் கேட்டது. அதனால் நாங்கள் உஷாரானோம். அவர்கள் மானின் காலை கட்டி இழுத்துச் செல்லலாம் என கூறியபோது பாலசுப்பிரமணியனும் பதுங்கிக் கொண்டார். அவர்கள் வேட்டைக்கு பயன்படுத்திய கள்ளத்துப்பாக்கியையும் வேட்டையாடிய மானையும் தூக்கிக்கொண்டு இருசக்கர வாகனத்தில் ஏற்ற முயன்றபோது நாங்கள் சுற்றிவளைத்தோம். அதில் இரண்டு நபர்கள் பிடிபட்டார். ஒருவர் தப்பி ஓடிவிட்டார். அதில் ஒருவரின் பெயர் அருள்பாண்டியன், த/பெ.மணி செங்கத்தூர் பூமிதானபுரம்,  மற்றும் மற்றொரு நபரின் பெயர் ஆறுமுகம் த/பெ. ராஜமாணிக்கம் அரும்பாவூரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

அவர்களை இரண்டு மணியளவில் வனச்சரகர் கைது செய்தார். விசாரணை செய்தபோது அவர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். அதை சாட்சிகள் வனச்சரகர் எல்.குமார் மற்றும் வனக்காப்பாளர்கள் பாலசுப்பிரமணியம் மற்றும் குணசேரகன் ஆகியோர்கள் முன்னிலையில் ் நான்தான் பதிவு செய்தேன். அப்போது ஆய்வாளர் கலா மற்றும் கலையரசனும் உடன் ் இருந்தனர். மேலும் 2.15 மணியளவில் H நமூனாவில் இறந்த ஆண் புள்ளி மானையும் கள்ளத் துப்பாக்கியை பால்ரஸ் உடன் இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றினோம். பின்பு அவர்களை அழைத்துக்கொண்டு எங்களது அலுவலகத்திற்கு வந்தோம். அலுவலகத்திற்கு வந்து இந்த வழக்கை WLOR 3/2019 என பதிவு செய்து இந்நீதிமன்றத்தில் எதிரிகளை ஒப்படைத்தோம். மேலும், அவர்களை கைது செய்தபோதே அந்த இடத்திற்கான தோராய வரைபடத்தையும் நான் தான் வரைந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும்(எதிரிகளை சாட்சி சரியாக அடையாளப்படுத்தினார்). அடிபட்ட மானிற்கு நடு வயிற்றுப் பகுதியில் துப்பாக்கி குண்டு துளைத்து இருந்தது. மேலும் கொம்பிற்கு அடியில் அடித்ததற்கான அடையாளமும் காணப்பட்டது. பின்பு வனச்சரகர் மானின் உடலை பரிசோதனை செய்ய கால்நடை மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன்படி மூன்று மருத்துவர்கள் குழுவாக பரிசோதனை செய்தனர்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.